மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை சட்டக் கல்லூரியில் பணி புரிகின்ற ஆசிரியர்கள் பாடங்களைத் தமிழில் சொல்லிக் கொடுக்கத் தகுதி படைத்தவர்கள்; ஆகவே அவர்களைத் தவிர தமிழில் சொல்லிக் கொடுக்க தனியாக வேறு ஆசிரியர்களை நியமிக்க அரசிடம் உத்தேசம் இல்லை.

கதர் கிராமத் தொழில் துறையின் மின்விசை எண்ணெய் செக்குகள்.

194—(*வினா எண் 9497) திரு. க. பாரமலை: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கதர் கிராமத் தொழில் துறையின் உதவி பெற்றும், சுயவேலை வாய்ப்பு நிதி உதவித் திட்டத்தின் கீழ் உதவிபெற்றும் துவக்கப்பட்ட மின்விசை எண்ணெய் செக்குகள் மொத்தம் எத்தனை ?

(ஆ) அதில் பெரும்பாலானவை செயலிழந்து போய் விட்டது என்று சொல்லப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவற்றை செயல்பட வைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மொத்தம் மின் விசை எண்ணெய் செக்குகள் 2,390.

(ஆ) 1986 மார்ச் மாதம் வரை 480 மின்விசை செக்குகள் சிறு குறைபாடுகளின் காரணமாக செயல்படாமல் இருக்கின்ற தகவல் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

(இ) பம்பாய் கதர் வாரிய ஆய்வுக் குழுவின் மூலமாக 1986-87 ஆம் ஆண்டு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் அடிப் படையில் இவைகளைப் பழுதுபார்க்க 4 சேவா நிலையங்களை அமைத்துத் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன.

1987 மார்ச் 26]

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த நாட்டு விசை செக்குகள் அதிகப்படி பயன்படாமல் போவதற்குக் காரணம் அதனுடைய வடிவமைப்பிலுள்ள குறை பாடுகள்தான் என்று நிபுணர் குழு அறிக்கை கொடுத்திருப்பதாக தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இது பற்றி மாண்புமிகு திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள்கூட கவன ஈர்ப்பு மூலமாக தெரிவித்தபோது அமைச்சர் அவர்கள் அன்றைக்கு ஒரு வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்கள். 4—6—1986 ஆம் தேதியன்று ஒரு உயர் மட்டக் குழுவைக் கூட்டி விரைவாக அதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைப்பதாக அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் அந்த நிபுணர் குழு 8 பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? அந்தப் பரிந்துரைகளை விரைவாக அமல் படுத்து வதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82, 1982-83 ஆம் வருடங்களில் வாரியத்தால் வழங்கப்பட்ட செக்குகள் மட்டும் கொஞ்சம் பழுது பட்டன. அவைகளைப் பார்ப்பதற்கு ஒரு உயர் மட்டக் குழு ஏற்படுத்தப்பட்டு அதனுடைய இரண்டு கூட்டங்களில் ஒன்று வேலூரிலும் மற்றொன்று மதுரையிலும் நடைபெற்றன. அவர்கள் எட்டு ஆலோசனைகளைத் தந்திருக்கிறார்கள். அதன் மீது கதர் கிராமத் தொழில் வாரியம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளில், பழுது ஏற்பட்டுள்ள இயந்திரங்களுக்கு 1,500 ரூபாய் இலவசமாகவும், 1,500 ரூபாய் கடனாகவும் வழங்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை எத்தனை நாட்டு செக்குகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது? மின் கட்டணம் 1—6—1985-க்கு முன்பு 0.15 பைசாவாக இருந்தது. அதை இப்போது 0.55 பைசாவாக உயர்த்தியன் காரணமாகத்தான் இந்தச் செக்குகள் அதிக பளுவைத் தாங்க முடியவில்லை என்று அதை 0.15 பைசாவாக ஆக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உயர் மட்டக் குழுவினுடைய பரிந்துரையின் மீது 1,500 ரூபாய் மானியமாகவும், 1,500 ரூபாய் கடனாகவும் வழங்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை பம்பாயிலிருந்து கதர் வாரியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கப் படுகிறது. மற்றொன்று, மின் துறைக்கு தரப்படுகிற அந்தக் கட்டணத்தை 0.15 பைசாவாக மாற்ற மின் இலாக்காவை அணுகி இருக்கிறார்கள்.

நெல்லை மாவட்டம் கார்குறிச்சியில் மண்பாண்டத் தொழில் மையம் அமைத்தல்

195—(*வினா எண் 9744) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் கார்குறிச்சியில் சுமார் 6 லட்சம் மதிப்பீட்டில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு மையம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இப்பொழுத் தொழிற்கூடம் கார்குறிச்சியில் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், விரைவில் இப்பணிக்கூடம் கட்டி முடிக்கப்படும் எனவும் கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

திருவிடைமருதூர் தொகுதியில் கதர் பாலியஸ்டர் தொழிற்சாலை அமைத்தல்.

196—(*வினா எண் 12034) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலம் கதர் பாலியஸ்டர் தொழிற்சாலை திருவிடைமருதூர் தொகுதியில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?